**செ. கு. எண்: 077** **நாள்: 06.08.2019**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 6.8.2019**

---

பிரபல நாடக மற்றும் திரைப்பட நடிகரும், எழுத்தாளருமான திரு. ஒய்.ஜி. மகேந்திரன் அவர்களின் அன்புத் தாயாரும், சினிமா துறையின் முன்னோடியான மறைந்த திரு. ஒய்.ஜி. பார்த்தசாரதி அவர்களின் மனைவியும், தலைசிறந்த கல்வியாளருமான திருமதி ஒய்.ஜி. இராஜலெட்சுமி அவர்கள் இன்று **(6.8.2019)** உடல் நலக் குறைவினால் இயற்கை எய்தினார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

திருமதி இராஜலெட்சுமி பார்த்தசாரதி அவர்கள், திரு. ஒய்.ஜி. மகேந்திரன் அவர்களுக்கு நல்லதொரு தாயாகவும், அவரது பல்வேறு முயற்சிகளுக்குப் பக்கபலமாகவும் திகழ்ந்தவர். கல்வி உலகில் முன்னோடியாகவும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு நல்ல வழிகாட்டியாகவும் விளங்கியவர்.

மறைந்த திரு.ஒய்.ஜி. பார்த்தசாரதி அவர்கள், தனது ''அமெச்சூர் ஆர்ட்டிஸ்ட் அசோசியேசன்'' வாயிலாக மாண்புமிகு அம்மா, திருமதி லட்சுமி, திரு. ஒய்.ஜி. மகேந்திரன், திரு. முத்துராமன், திரு. மேஜர் சுந்தர்ராஜன் போன்ற பழம்பெரும் நடிகர், நடிகையர் பலரை நாடகத்தில் வளர்த்து சினிமா துறைக்குத்

தந்தவர். அன்னாரது மனைவி திருமதி ஒய்.ஜி. இராஜலெட்சுமி அவர்களின் மறைவு, அவருடைய குடும்பத்தினர் அனைவருக்கும் மட்டுமல்லாமல், கல்வித்துறைக்கு, மாணவர் சமூகத்திற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு ஆகும்.

அன்னாரை இழந்து வாடும் திரு. ஒய்.ஜி. மகேந்திரன் அவர்களுக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**